**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF THE PRINCIPAL ASSISTANT SESSIONS JUDGE, KANCHEEPURAM**

| | |
|---|---|
| Sessions Case No | SC.No.11/2022 |
| Primary Register Case No; | |
| Deposition of Witness for | Prosecution PW - 4 |
| | Defence |
| | Court |
| Name | தீனதயாளன் |
| Father's Name | |
| Village | |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Regligion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09th day of January 2026.

Signature of Witness

Name of the INterpreter: Tmt. Mohana, Gr.III, Bench Clerk

Solemnly affirmed in accordance with the Provisions of the Oaths Act 1969 (Central Act 44 of 1969) on the 09th day of January 2026.

Signature of Interpreter

## <u>முதல் விசாரணை</u>

நான் ஆட்டோ ஓட்டி வருகின்றேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையதுதான். அது அ.சா.2 ஆகும். நான் வாலாஜாபாத் ஆட்டோ ஸ்டாண்டில் 2015 ஆம் வருடம் தேதி மாதம் சரியாக ஞாபகம் இல்லை. போலீசார் என்னிடம் அந்த கையெழுத்தை வாங்கினார்கள். இந்த வழக்கு தொடர்பாக வேறு எதுவும் எனக்கு தெரியாது. எதற்காக அந்த கையெழுத்தை வாங்கினார்கள் என்று விபரமும் எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க நான் கையெழுத்து போட்டுக் கொடுத்தேன். இவ்வழக்கு தொடர்பாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை.

## <u>அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக கருத அனுமதி கோரி அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை.</u>

கடந்த 09.04.2015 அன்று இரவு 8.45 மணிக்கு வாலாஜாபாத் ரவுண்டானா அருகே நானும் அ.சா.3 அரவிந்த் பாபு பேசிக் கொண்டிருந்தபோது வாலாஜாபாத் காவல் ஆய்வாளர் அன்று இரவு 7 மணி அளவில் இவ்வழக்கின் எதிரி சந்தோஷ் என்பவர் கத்தியை காட்டி மிரட்டி வழிப்பறி செய்த இந்த வழக்கு தொடர்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து கொண்டிருந்த போது அதில் என்னையும் அ.சா.3யும் சாட்சியாக இருக்க கேட்டுக் கொண்டு நாங்கள் சம்மதம் தெரிவித்து எங்கள் முன்னிலையில் அந்த ஆவணங்களை தயார் செய்து அதில் நானும் அ.சா.3ம் சாட்சிகளாக கையெழுத்து செய்துவிட்டு தற்போது எதிரியை வழக்கிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றார் சரியல்ல.

Sd/– K.S.அருண் சபாபதி,
முதன்மை சார்பு நீதிபதி,
காஞ்சிபுரம்